# ZAHIRA COLLEGE – COLOMBO

Holiday Assignment – 2nd Term 2015

| | |
|---|---|
| Medium : Tamil | Grade: 11 |
| Subject : Tamil Literature | Adm. No: |
| Name : | |

## பகுதி II

பாடற்பகுதிக்கு அல்லது உரை நடைப்பகுதிக்கு விடை எழுதுக

செந்தமிழ் மக்களே வாரீர் - எங்கள்
தெய்வர் மொழிச் சீருனைத் தேரு
அந்தமி லெம்மொழிமாதா – படும்
அல்லலை தீர்க்க அறிவுவ – ராதா

முச்சங்கத்து தருயணையோடு – மன்னா
முடிதொட்ட மூவரும் அடிதொட்டு போற்ற
விச்சையா ரலசாண்டை மாதா – அவன்
வேதனை தீர்க்க விரக்கம்வ – ராதா

இன்னமு தோதெனி தேனோ என
ஏஞ்செவிக் கினிக்கின்ற மொழியேது தானோ
அன்னை மொழிதனை நாமோ வெறுத்
தருவருத் தவமதித் திடழல காமோ

சிந்தையிற் றேனமுறி – நாவில்
தித்தித்துத் தித்தித்துச் செவி வழயேறி
வந்து கனிந்திருள் கீறி – எம்மை
வாழ்விக்கும் மொழியினை மறப்பதோ மீறி

வேற்று மொழிகளைக் கற்றோம் எங்கள்
மெய்யான முது சொத்தை விலைபேசி விற்றோம்
ஆற்றிலே புளிகரைத்திட்டோம் - ஐயோ
அருமந்த தமிழினை அறியாது கெட்டோம்

(i) இப்பாடலை கவிஞர் எழுதியிதன் நோக்கம் யாது?

(ii) இப்பாடல்களில் தமிழ் மொழியின் தொன்மை, இனிமை, எவ்வாறு எடுத்துக் காட்டப்படுகிறது.?

(iii) பின்வரும் அணிகளை விளக்குக. தெயவத் தமிழ், மொழிமாதா

(iv) மெய்யான முது சொத்தை விலைபேசி விற்றோம். ஆற்றிலே புளி கரைத்திட்டோம் என்ற அடிகள் மூலம் புலப்படுத்துவது யாது?

(v) இப்பாடல் மூலம் கவிஞரின் மொழிப்பற்று வெளிப்படுத்தப்படுமாற்றினை விளக்குக.

அல்லது

நாம் வாழும் இந்தக் காலம் பல வகையிலும் முன்னேறி இருக்கிறது. நம்முன்னோர்களின் காலத்தில் இல்லாத எத்தனையோ புதிய கருவிகளை நாம் பெற்றிருக்கிறோம். வேகமாக செய்திகளைப் பரப்ப முடிகிறது. வானளாவிய உயர்ந்த மாளிகைகளைக் கட்ட முடிகிறது. ஆயிரக்கணக்காணவர்களின் கைகள் உழைத்து செய்ய முடியாத அரிய வேலையை ஒரு யந்திரத்தைக் கொண்டு செய்து விட முடிகிறது. தொழிற்சாலைகளில் மிக எளிதில் மிக வேகமாக பொருளை உற்பத்திசெய்ய முடிகிறது.

ஆனால் ஒன்று தான் முடியவில்லை. நம்முன்னோர் போல் அவ்வளவு அமைதியாக இன்பமாக வாழ முடியவில்லை. பல வகையிலும் நமக்கு உதவி வருகிற அறிவியல் தம் வாழ்க்கையின் அமைதிக்கு அவ்வளவாக உதவி செய்ய முடியவில்லை.

(i) இக்கட்டுரையின் மூலம் கட்டுரையாசிரியர் கூற விழையும் கருத்து யாது?

(ii) நமக்கு உதவி வருகிற அருவியல் தம் வாழ்க்கையின் அமைதிக்கு உதவவில்லை" என்ற வாசகத்தின் கருத்தினை தெளிவுபடுத்துக.

(iii) அறிவியல் வளர்ச்சிடைந்துள்ளது என எனக்காட்டி கட்டுரையாசிரியர் கட்டுரையை வளர்த்துச் செல்கிறார்

(iv) அவர் முன் வைக்கும் கருத்து தற்காலத்துக்கு பொருத்தமானதா? ஆம் எனின் கருத்துரை வழங்குக.

(v) இப்பாடல் மூலம் கவிஞரின் மொழிப்பற்று வெளிப்படுத்தப்படுமாற்றினை விளக்குக.

## பகுதி III

எவையேனும் 2 வினாக்களுக்கு விடை எழுதுக

4. "வேட்கை" என்ற சிறுகதையின் மலையக மக்களின் வாழ்வியல் நிலைமை எவ்வாறு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

5. கங்கை வேடனும் காளத்தி வேடனும் என்ற கட்டுரையில் குகன் - இராமன் மீது கொண்ட அன்மையும், கண்ணப்பன் - காளததி நாதர் மீது கொண்ட அன்பையும் எடுத்துரைக்க

6. வெற்றிப்பயணம் என்ற கவிதையில் கவி எவரெவரை எதற்கு அழைக்கிறார்?

7. போதியோ பொன்னம்மா என்ற கவிதையில் பொன்னியம்மாவின் அன்றை நிலைமையையும் இன்றை நிலைமையையும் எடுத்துக்கூறி அதனை தீர்க்க எடுத்த முயற்சியையும் விபரிக்குக.

5. நம்பிக்கை என்ற பாடத்தின் மூலம் உணர்த்தப்படும் விழுமியப் பண்புகள் யாவை?